# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2261 - 2021 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2021.12.31

*2261 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1838* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1846* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2022*, சனவரி மாதம் *21* ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் *2022*, சனவரி மாதம் *07* ஆந் திகதி நண்பகல் *12.00* மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1835-B 82304-5,403 (2021/ 12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

இலங்கைப் பொலிஸில் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து "பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்புப் பகுதி, இல. 375, 01 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு - 06" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2022.01.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படமாட்டாது.

03. **வேதன முறைமை.**- மாதாந்தம் ரூபா 29,540.00 - 7 × 300 - 27 × 370 - ரூபா 41,630.00.

இந்த வேதனக் கொடுப்பனவானது பொது நிருவாக சுற்று நிருப இலக்கம் 03/2016 இன் படி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இவ் உத்தியோகத்தர்களுக்கு 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சகல கொடுப்பனவுகளும் உரித்தானது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவிற்கு மேலதிகமாக இங்கு கீழ்வரும் கொடுப்பனவுகள் இவர்களுக்கு மாதாந்தம் கிடைக்கப்பெற உரித்தானது.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு - ரூபா 7,800.00

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இன் படி பதவிக்கேற்ப 40% கொடுப்பனவு - ரூபா 11,816.00

(இ) கஷ்டப் பிரதேசச் சலுகைக் கொடுப்பனவு - ரூபா 2,000.00

(ஈ) உள்ளக இடைக்காலக் கொடுப்பனவு - ரூபா 2,500.00

(உ) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு - ரூபா 250.00

(ஊ) போக்குவரத்துக்கான கொடுப்பனவு (பட்டா) - ரூபா 10,500.00 (விசேட கொடுப்பனவு வழங்கப்படும் பிரதேசங்களிற்கு உபரிமமானது)

(எ) போக்குவரத்துக்கான கொடுப்பனவு (பட்டா) - ரூபா 9,800.00 (விசேட கொடுப்பனவு வழங்கப்படாத பிரதேசங்களிற்கு உபரிமமானது)

**இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக**

(அ) இலவச போக்குவரத்து ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச வைத்திய வசதி (வெளிநாட்டில் சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்) ;
(இ) சீருடை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு அரச பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளை கற்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் ;
(உ) சமூக பொலிஸ் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்த இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இது சம்பந்தமாக உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் விசேட பயிற்சிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் ;
(ஊ) உங்களது விளையாட்டுத் திறமை மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள் ;
(எ) கடமைக்கு செல்வதற்கான கட்டணம் மற்றும் கஷ்டப் பிரதேச கடமைக்கானதும் விஷேட கடமைக்கான வெகுமதியாக பணப் பரிசுகளும் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18-25 க்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள்.**–
க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் ஊடக மொழியில் திறமைச் சித்தியுடன் விண்ணப்பதாரி ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன் 04 பாடங்களில் திறமைச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். மேலும் கணித பாடத்தில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 01.**–இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின்படி பாட எண் 41, 44 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும் எண் 42 மற்றும் 45 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02.**–க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாத வராகவே கருதப்படும்.

**குறிப்பு 03.**–வேறு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா./த.) பரீட்சை அட்டவணைக்குட்படாமையினால் அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க. பொ. த. (சா. / த.) பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படமாட்டாது.

4.3 **உடற்தோற்றம் :**

* உயரம் : 05 அடி 04 அங்குலம் 162.5 சென்றி மீற்றர் (குறைந்தது)
  மார்பளவு : 30 அங்குலம் 76 சென்றி மீற்றர் (குறைந்தது மூச்சுக் காற்று அற்ற)

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மன தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.3.2 கட்புல தொழிற்பாடு.– மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண் வில்லையின்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

4.4 **வேறு தகுதிகள்.**–

4.4.1 இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

4.4.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.

4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் உள்ளவர்களும் தகுதியற்றோர் ஆவர்.)

4.4.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.4.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4 : 4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

05. **ஆரம்ப பரீட்சை** .– விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சையில் பந்தி 4.3 (4.3.2 மற்றும் 4.3.3 தவிர்ந்த) மற்றும் 4.4 (4.4.2 மற்றும் 4.4.4 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமாதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்கத் தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவுபெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்டம் தூரம்/ Run meters 1000 மீற்றர் | 3 நிமிடங்களிற்குக் குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களுக்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களுக்கிடையில் | 10 |
| Chinup (5 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல்) | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயற்பாட்டிற்கு 01 புள்ளிப்படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |

**குறிப்பு** : 1000 மீற்றர் தூரத்தினை 5 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர்.

06. **எழுத்துப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|
| 01. புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சி | 50 | 40% |
| 02. பொது அறிவும் புத்தி கூர்மைக்கான பரீட்சை | 50 | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | தேவையற்றது |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழித் தகைமைகள் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன்படி வெற்றிட எண்ணிக்கையினை 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**குறிப்பு** : மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை.-**

9.1 எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகணப்படி தயாரிக்கப்பட்டு அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன்படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏதேனும் பாதகமான அறிக்கைகள் உண்டா என்பது சம்பந்தமாக பின்னணிப் பரீட்சை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் பாதகமான அறிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் பாதகமான அறிக்கைகள் உடைய விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகுதியை இழக்கச் செய்யும். பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

10. **வைத்திய பரீட்சை.-** வைத்திய பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதாரப் பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.-**

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.-** நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.-**

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறித்த 13:3 ஆம் பிரிவிற்கு கீழ்ப்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அதன் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 பொது சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாக சுற்றுநிருபங்கள், திறைசேரி சுற்றுநிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்றுநிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனும் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவரிற்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளிற்காக தீர்மானிக்கப்படும் தொகை அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும். விலகிச் செல்வது சம்பந்தமாக தாபன விதிக் கோவை ஒழுங்கு விதிகள்/பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருப ஒழுங்கு விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.

உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களுடன் மனைவியினது விபரங்களையும் சேர்த்து வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதி கூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்.**- நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில்தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவைக் காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும். அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை.**- வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை கீழ்வருமாறு நடைமுறைப்படும் –

| வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை எழுத்துப் பரீட்சை தொழில் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை) | பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |

| வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை எழுத்துப் பரீட்சை தொழில் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/வேறு |
|---|---|---|
| 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப்புலமை**.-

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரசகரும மொழி | அரச கரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரசகரும மொழித் திறனை பயிலுநர் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழிகள் | அரச நிர்வாக சுற்று நிருபம் 01/2014 மற்றும் அதற்கு துணையான சுற்றுநிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I ( II அ) இல் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்தல் சம்பந்தமாக உரியதான பொது நிபந்தனை பாதிக்கும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரச உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை 11 × 8 அங்குல அளவிலான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் சமர்ப்பிக்கப்படலாகாது.

மேலும் இவ் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (Online application) பூர்த்தி செய்வதற்கு www.police.lk என்ற இணையத்தளத்தில் உள்ள "join us" ஐ கிளிக் click செய்வதுடன் அல்லது www.public.police.lk என்ற இணையத்தளதிற்கு பிரவேசித்து பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை அனுப்பப்படல் வேண்டும்.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்குப் போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பொலிஸ் மாஅதிபர்.

| |
|---|
| அலுவலக உபயோகத்துக்கு<br>அளவு 2" × 2 1/2" |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :..............................................................................................
..............................................................................................
(பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.)

(i) முழுப்பெயர் (ஆங்கில கபிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) தமிழில் :..............................................................................................

(i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கபிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(இ) விண்ணப்பிக்கும் பதவி :..............................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :..............................................................................................
(தேசிய ஆளடையாள அட்டையின் நிழற்படப்பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :..............................................................................................

4. விண்ணப்பதாரி பிறந்த இடம் :..............................................................................................

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :................................................ மாகாணம் : ........................................................

5. (அ) தற்போதைய முகவரி (தமிழில்) :..............................................................................................
(i) தற்போதைய முகவரி (ஆங்கில கபிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :........................................................
(இ) நிரந்தர முகவரி தமிழில் :........................................................
(ii) தற்போதைய முகவரி (ஆங்கில கபிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :........................................................
(உ) கடிதங்கள் பரிமாற்றப்பட வேண்டிய முகவரி :........................................................
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :......................... பிரதேச செயலகம் :...................................
(எ) தொலைபேசி இலக்கம் வீடு :........................................................ கையடக்கம் :................................................
(ஏ) மின்னஞ்சல் முகவரி :........................................................ வாட்ஸ் அப் இல. : .............................

6. (அ) இனம் :.........................................................

7. பிறந்த திகதி :........................ (பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று) :
வருடங்கள் :........................ மாதங்கள் :........................ நாட்கள் :........................

8. உயரம் : அடி :........................ அங்குலம் :........................ மார்பளவு : ........................ அங்குலம் :........................
உயரம் : ........................ சென்ரிமீற்றர் மார்பளவு : ........................ சென்ரிமீற்றர்

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

(அ) உயர் தர சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின்

| பாடத்துறை | Z Score |
|---|---|
| | |

10. எழுத்துப்பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி :................................

11. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :................................

12. (அ) தற்போது செய்யும் தொழில் :................................
(ஆ) நீர் ஆயுதப்படை உறுப்பினரா ? :................................

13. நீர் இதற்கு முன்னர் இலங்கைப் பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா? :................................
பதவி/சீருடை இலக்கம் :................................
அவ்வாறாயின் நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக :................................

14. (அ) நீர் ஆயுதப்படையில் /தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும் :.................................................
(ஆ) நீர் ஆயுதப்படையில் /ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற்படப் பிரதியை இணைக்கவும் :-----.

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளீரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :...........................................

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :...............................................

மேற்படி விடயங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையென்று உறுதிப்படுத்து கின்றேன். அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என்று தெரிய வந்தால் நான் சேவையில் இணைக்கப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடைநிறுத்த உடன்படுவேனென்றும் என்பதை அறிவேன்.

.................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :............

17. நிறுவனப் பிரதானியின் அறிக்கை (உரிய பெயர் மட்டும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ....................................... அவர்கள் ............ திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் தெரிவிக்கின்றேன்.

.................
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
அதிகாரபூர்வ முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

12-726

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

### மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு – 2020 ஆம் ஆண்டு

சுகாதார அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2022.01.31 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கப்பட வேண்டியவை :**

ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2018 மற்றும் 2019 ஆகிய இரண்டு வருடங்களிலும் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்து இருந்தாலும் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இரண்டு வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

எந்தவொரு விண்ணப்பதாரரும் அவரால் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பத்தில் உண்மைக்கு புறம்பான தகவல்களை உள்ளிடாதிருத்தல் வேண்டும். உண்மைக்கு புறம்பான தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அவர்களின் பெயர்கள் அரசாங்க சேவைக்கு இணைக்காதவர்களின் பட்டியலுக்கு உள்வாங்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலிலும் இணையதளத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர் என உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 9.4, 9.5, 9.6 மற்றும் 9.7 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்படுத்திக்கொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

**02. கற்கை நெறிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

| க.பொ.த. (சா.த.) தகைமை | க.பொ.த. (உ.த.) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட விடயங்கள் |
|---|---|---|
| சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க. பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். | 2018 ஆம் வருடத்தின் அல்லது 2019 ஆம் வருடத்தின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் வருடத்தின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய ஏதாவதொரு கல்விப் பொதுத் தராதர பத்திர (உ. தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இராசயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br>அல்லது<br>2018 ஆம் வருடத்தில் அல்லது 2019 ஆம் வருடத்தின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் வருடத்தின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய ஏதாவதொரு கல்விப் பொதுத் தராதர (உ. தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத்துறைக்குரிய இணைந்த கணிதம், இராசயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் தோற்றி அனைத்து பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | முழு நேர கற்கை நெறியான இதன் காலம் 03 வருடங்கள் ஆகும். அத்துடன் கற்கைநெறி ஆங்கில மொழியில் நடாத்தப் படும்.<br><br>2022.01.31 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல் வேண்டும்.<br><br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

**அட்டவணை இலக்கம் 01**

*03.* **கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :**

*3.1.* மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதற்கான 2013.11.19 ஆந் திகதிய 1837/8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பானது, தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.)

*3.2.* நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப் படும்.

*3.3.* அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்திலும் இருந்து 2018 ஆம் வருடத்தில் அல்லது 2019 ஆம் வருடத்தின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் வருடத்தின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒவ்வொரு பரீட்சையிலும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாவட்டத்திலும் இருந்து அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

*3.4.* அதன் பின்னர் ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறையின் கீழ் இந்த கற்கைநெறிக்கு விண்ணப்பித்த குறைந்த கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

*3.5.* அவ்வாறு ஒவ்வொரு பரீட்சையிலும் இருந்தும் (2018 ஆம் வருடத்தில் அல்லது 2019 ஆம் வருடத்தின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் வருடத்தின் (புதிய பாடத்திட்டம்) ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளையும், 95% பெண் விண்ணப்பதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்து ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z பெறுமதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

*04.* **தகுதிகள் :**

**அனைத்து விண்ணப்பதாரர்களும் :**

*4.1.* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

*4.2* விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

*4.3.* தாம் விண்ணப்பிக்கும் மாவட்டம் வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு, விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியான 2022.01.31 ஆந் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து 03 வருடங்களாக வதிவிட காலத்தை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வதிவிட மாவட்டமாக அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தை வழங்க முடியாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களின் முந்தைய வதிவிட காலங்களை கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் அடுத்ததாக நீண்ட காலங்கள் வசித்த மாவட்டம் விண்ணப்பதாரருக்கான வதிவிட மாவட்டமாக நேர்முகப் பரீட்சை சபையினால் தீர்மானிக்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை நேர்முக சபையிடம் விண்ணப்பதாரர்கள் உனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** :

விண்ணப்பதாரர் ஒருவரின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிரக்க முடியாத காரணங்களினால் கிட்டிய 03 வருட வதிவை அவரினாற் உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமரப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

05. **கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள்.-**

5.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரசாங்க பல்கலைக்கழகம்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கான "அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்" இன் கீழ் உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.2 தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.3 சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்கையை தொடர்பவர்கள்.

5.4 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பிறகு பதிவை இரத்து செய்து கொண்டாலும் அவர்கள் இதற்காக விண்ணப்பிப்பதற்கு/நுழைவதற்கு தகுதியற்றவர்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பிறகும்/நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்ட பின்னரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்து கொண்டாலும் அவர்களும் கற்கைக்காக நுழைவதற்கு தகுதியற்றவர்கள்.

5.5 திருமணம் பதிவு செய்யப்பட்ட அல்லது விவாகரத்து செய்யப்பட்ட நபர்கள்.

06. **ஏனைய விடயங்கள்.-**

6.1 நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் நடைமுறைப்படுத்திய திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

6.2 மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

6.3 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள் அல்லது 5.4 மற்றும் 5.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும்.

6.4 கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் தினமான 2022.01.31 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

07. **விண்ணப்பிக்கும் முறை.-**

7.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல் படித்தைப் பார்க்கவும்.

7.2. விண்ணப்பதாரர் 500.00 ரூபா பணத்தை, இலங்கை வங்கி, தப்ரபேன், இல. 7041318, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலுத்துதல் வேண்டும். இக்கட்டணத்தை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகவும் அல்லது பணம் வைப்புச் செய்யும் இயந்திரங்களின் ஊடாகவும் அல்லது இணையத்தள வழியின் ஊடாகவும் செலுத்த முடியும். இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் பிறிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியமைக்கான ஆதாரம் (பற்றுச்சீட்டு) இனை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

7.3. இவ்வாறு தங்களினால் வெற்றிகரமாக பதிவேற்றப்பட்ட (UPLOAD) விண்ணப்பத்தின் பிரதியை தபாலில் இவ்வமைச்சிற்கு அனுப்ப வேண்டியதில்லை. ஆனாலும் விண்ணப்பம் பதிவேற்றம் செய்த பின்னர் கிடைக்கப்பெறும் 5 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டு இலக்கத்தை அச்சுப் பிரதிகளை பின்னர் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக பாதுகாப்பாக வைத்திருக்கவும். அத்துடன் அச்சுப் பிரதியொன்றை (PRINT OUT) எடுத்து அதில் உரிய இடத்தில் உங்களது கையொப்பத்தை இட்டு 8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பத்தை சான்றுறுதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் எடுத்து வரவும்.

**குறிப்பு :**

இக்கற்கைக்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் மட்டும் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்தற்கு வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 9.00 தொடக்கம் 4.00 வரையான காலத்தில் சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரவின் 0112340007 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.)

08. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

8.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர்/இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர்/இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 512,148.00 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

09. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்.-**

9.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையத்தள விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்த கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மைப் பட்டியலொன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் இந்த பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்கள்/ ஆவணங்களை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப் பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்கள்/ஆவணங்களை நேர்முகப் பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் இந்த அமைச்சின் உரிய பிரிவில் கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இதற்காக தெரிவு செய்வதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

9.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்டது).

9.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

9.4. க.பொ.த (உ.த.) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட).

9.5. க.பொ.த (சா.த.) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

9.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

9.7. 500.00 ரூபா பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு.

9.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ்.

9.9. விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையொப்பமிடப்பட்ட உறுதி மொழி.

**குறிப்பு**.- (அ) மேலே 9.2 தொடக்கம் 9.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது எடுத்து வரப்படல் வேண்டும்.

(ஆ) பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனது இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

(உ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களினால் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமுகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணத்திற்காகவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10. **பயிற்சித் திட்டம்**.-

10.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சிக் கல்லூரிக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.2. பயிற்சிக்காக இணைக்கப்படும் பயிலுநர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருத்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்ட ஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

10.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

10.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய/மாகாண அரசாங்க சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். மேலே 10.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறும் மாணவர்கள் பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணத்தை அவரினால் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

10.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் இறுதித் தினமாகும் போது திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணமாகாது இருப்பது கட்டாயமானதாகும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்.-**

11.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும் பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் பயிலுநர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

11.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

11.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உட்சேர்க்க வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு திருப்தியின்மை பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.4. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

11.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரசாங்க சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

11.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

11.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள் வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

வைத்தியர் எஸ். எச். முனசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2021.12.09.

12-604

---

**கல்வி அமைச்சு**

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்**

2021 ஆம் கல்வியாண்டிற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு
மாணவர்களை அனுமதித்தல்

2020 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் க.பொ.த.(உ./த.) பரீட்சையை வெற்றிகரமாக முடித்தவர்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) நடத்தும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***விண்ணப்பிக்கும் முறை:*** விண்ணப்பம் apply.sliate.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வேறு எந்த விதமான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் இஸெட் மதிப்பெண்கள் (Z-score) மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடத்தப்படும். தெரிவுப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையில் இரண்டு பிரிவுகளின் கீழ் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

| | |
|---|---|
| இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) பாடநெறிகள் - வகுதி - 1 | கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA), வியாபார நிருவாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBA), வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBF), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (Civil)), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (Mechanical) ), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (Electrical & Electronics), உயர் தேசிய டிப்ளோமா (தொகைக் கணக்கெடுப்பு) (HNDQS), உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE), தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT (Agri) ) |

| | |
|---|---|
| தெரிவுப் பரீட்சை மதிப்பெண்களின் அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகள் - வகுதி - 2 | ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English), தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDIT), முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM), செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM), சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM), உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) |

தயவுசெய்து உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் நுழைவுத் தகுதிகளுக்கு **பிரிவு அ** வையும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) பற்றிய விபரங்களுக்கு **பிரிவு ஆ** வையும் பார்க்கவும்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பிரிவிலும் (வகுதி - 1 மற்றும் வகுதி - 2) அதிகபட்சமாக ஐந்து கல்வித் திட்டங்களுக்கு ஒரு வகைக்கு ரூபா 500.00 கட்டணம் செலுத்துவதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஒரு விண்ணப்பதாரர் இரண்டு வகைகளுக்கும் விண்ணப்பித்தால், ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனித்தனியாக நேரடியாக வங்கிக்கு பணம் செலுத்த வேண்டும். நிகழ்நிலையில் (ஒன்லைன்) பணம் செலுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது.

வங்கிக் கட்டண பற்றுச்சீட்டு பரிவர்த்தனை இலக்கம் (TRN) ஒன்லைன் விண்ணப்பத்தில் உள்ளிடப்பட வேண்டும்.

கொடுப்பனவுகள் மக்கள் வங்கி, ஹயிட் பார்க் கிளை, கொழும்பு-02 அல்லது இலங்கையிலுள்ள மக்கள் வங்கியின் வேறு ஏதேனும் கிளையில் SLIATE கணக்கு 025-2-001-1-3397613 இற்கு 2022, சனவரி 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதிசெய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் வன்பிரதியில் கையொப்பமிட்டு, பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு (ATI) அனுப்பப்பட வேண்டும். அங்கு விண்ணப்பதாரியின் முதல் தெரிவு 2022, சனவரி 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் மூலம் வழங்கப்படும்.

நிகழ்நிலையில் உருவாக்கப்பட்ட உசாத்துணை இலக்கமானது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் நிலையானது, செயற்படுத்தப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

2022.01.31 அன்றைய விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பாடநெறிகளை நடத்தும் முறை**:

முழுநேர பாடநெறிகள்
பகுதி நேர பாடநெறிகள் (வார இறுதி நாட்களில்)
போதனா மொழி : ஆங்கிலம்

சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிபவர்களுக்கு பகுதி நேர பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

**பாடநெறிக் கட்டணம்** :

முழுநேர பாடநெறிக் கட்டணம் - இலவசம்
ஒரு அரையாண்டுக்கு பகுதி நேர பாடநெறிக் கட்டணம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கணக்கீடு உயர் தேசிய டிப்ளோமா – HNDA | 7,500 ரூபா |
| ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா – (HNDA in English) | 12,000 ரூபா |
| தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – HNDITD | 18,000 ரூபா |

**பதிவு**:

கல்வி மற்றும் பிற தேவையான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**விடுதி வசதிகள்**:

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான முழுநேர மாணவர்களுக்கு பின்வரும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATIs) மட்டுமே கோரிக்கையின் பேரில் விடுதி வசதிகள் வழங்கப்படும்.

தெஹிவளை மற்றும் கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI ) - மாணவிகளுக்கு மட்டும்.

அம்பாறை மற்றும் கொழும்பு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI ) – ஆண் மற்றும் பெண் மாணவர்கள்

**பிரிவு "அ"**

உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கான நுழைவுத் தகுதிகள் (HNDA)

1. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)

1.1 முழுநேரம் - 4 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டில் திறமைச் சித்தியுடன் (வணிகப் பிரிவு மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தகுதியுள்ள மாணவர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பின் தகைமையுள்ள தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கு இரண்டாம் முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 பகுதி நேரம் - 4 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டிற்கான திறமைச் சித்தி.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

அல்லது

(ii) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கீட்டிற்கான சாதாரண சித்தி.

மற்றும்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களத்தினால் நடாத்தப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ் பாடநெறிகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

அ. கணக்கீட்டுத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா

ஆ. கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்.

இ. வணிகக் கல்வியில் தேசிய சான்றிதழ்.

ஈ. கணக்கீட்டில் தேசிய சான்றிதழ்

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

மற்றும்

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனம்/பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில் முனைவோர்) இருக்க வேண்டும்.

**குறிப்பு 1** : கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளின் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு 1 ஆம் ஆண்டிலிருந்து விலக்களிக்கப்படும். மேலும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATI) கிடைப்பனவுத் திறனுடன் பிற நுழைவுத் தேவைகள் பூர்த்தி செய்திருந்தால் 2 ஆம் ஆண்டுக்குப் பதிவு செய்யப்படுவார்கள்.

i. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் (SLIATE ) நடாத்தப்படும் வியாபார நிர்வாகம்/ வியாபார நிதி மற்றும் வியாபாரக் கல்வியில் தேசிய டிப்ளோமா உயர் தேசிய டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Foundation) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

iii. பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.

v. கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

vi. சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA – Sri Lanka) நடாத்தும் ACMA பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 2** :- பொது நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமானி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBA) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBF) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வர்த்தக பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - சிவில்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - மின்னியல் மற்றும் இலத்திரனியல்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - இயந்திரவியல்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

7. தொகைக் கணக்கெடுப்பு உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) – முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

8. நிருமாண சேவைகள் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE): முழு நேரம் - 3 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவில் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்.

9. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND in English)

9.1 - முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலேனும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப்படாது) சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

(ii) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திற்கான திறமைச் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

க.பொ.த. (சா./த.) ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரணத் சித்தியடைந்திருத்தல்

9.2 - பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரச துறை/பொது நிறுவனம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (EPF/ ETF ஆகியன கொண்ட) அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவுத் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./ த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா.த.) ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தியடைந்திருத்தல்.

11. தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDIT)

11.1 முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

க.பொ.த. (சா.த.) ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி.

11.2 பகுதிநேரம் - 2 ½ ஆண்டுகள்

11.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரச நிறுவனம்/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணிக்கமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகக் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்)

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரணத் சித்தி.

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDPM)
முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

14. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) – (HNDT – Agriculture)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி. (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)

மற்றும்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDTHM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

**பிரிவு "ஆ"**

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள்/[முழு நேரம் (முநே) மற்றும் பகுதி நேரம் (பநே)]

| | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agri)(FT), HNDA (FT), HNDM(FT), HNDIT (FT), HNDTHM(FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) HNDIT (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலாகம, அநுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT(PT) HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிறீன்லண்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT (PT), HNDA (PT),HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT), HND in English,(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (PT), |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல.42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு-15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil)(FT) , HNDE (Mechanical) (FT), HNDE (Electrical & Electronic) (FT) HNDQS(FT), HNDBSE(FT) |

| | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி, தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (F/T), HNDBA (FT), HND in English (FT), HNDBF (FT), HNDTHM (FT), HNDA (PT), HND in English (PT), |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical) (FT), HNDE(Electrical & Electronic) (FT), HNDQS(FT), HNDIT (FT), HNDT(Agri)(FT), HNDA (FT), HNDM(FT), HNDTHM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agri) (FT), HNDIT (FT), HNDFT(FT), HNDA (FT), HNDA (PT), HNDIT (PT), |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil)(FT), HNDE ((Electrical & Electronics) (FT), HNDA (FT), HND in English (FT), HNDQS (FT), HNDM (FT), HNDIT (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்- கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDTHM (FT) HNDA (PT),HND in English (PT), HNDIT (PT) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | HNDIT(FT), HNDA(FT), HND in English (FT), HNDPM(FT) HNDA (PT), HND in English (PT), |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT(FT), HNDA(FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT) HNDIT (PT), HNDA (PT), HND in English (PT), |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | டீ லாசாலே ஆங்கில மொழிப் பாடசாலை கட்டடம், தலைமன்னார் வீதி, மன்னார். | 023-3122555 | HND in English (FT), HNDIT (FT) |
| 14. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலப்பிட்டி. | இல. 154/6 கம்பளை வீதி, (ப்ளக் வீதி), ஐஸ்வர்யா மண்டபம், நாவலப்பிட்டிய | 054-2050634 | HNDTHM(FT), HNDM(FT) |
| 15. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி. | புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT), |

| | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 16. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | ATI ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT),HNDA (FT), HND in English (FT), HNDM (FT),<br>HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 17. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை. | யாயவத்த, நெதோல்பிட்டிய, தங்காலை | 047-2241845<br>0472241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT)<br>HNDA (PT), HND in English (PT) |
| 18. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்- திருகோணமலை. | கண்டி வீதி, வரோதய நகர், திருகோணமலை. | 026-2223232<br>026-2050617 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM (FT)<br>HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |
| 19. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா. | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா. | 024-2052733 | HNDA (FT), HND in English (FT),<br>HNDA (PT), HND in English (PT) |

**குறிப்பு**.-

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
2. க.பொ.த. (உ.த.) பொது திறன் பரீட்சைத் தாளில் (General Common Test Paper) குறைந்தபட்சம் 25 புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரரே உயர் கல்விக்கு தகைமை பெறுவார்.
3. வகுதி 2 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா அபேட்சகர்களினது தகைமையுள்ள விண்ணப்பதாரிகளினது ஆட்சேர்ப்பானது நிறுவனரீதியாக நடத்தப்படும் பொது எழுத்து மூலப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
4. 23 வயதிற்குட்பட்ட முழுநேர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. ஒரு குறிக்கப்பட்ட ATI இல் பாடநெறியைத் தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருக்க வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும்.
6. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வார நாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்து கொள்ள வேண்டும்.
7. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.
8. முழுநேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான பயிற்றுவிக்கும் முறை வகுப்பில், ஒன்லைனில் அல்லது தேவையைப் பொறுத்து இரண்டுமாக இருக்கும்.
9. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழு நேரம்) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.
10. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM) நிகழ்ச்சிகளின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களிலும் மூன்றாம் ஆண்டு வார இறுதி நாட்களிலும் நடத்தப்படுகின்றன.
11. முழு நேர திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப் பயிற்சி பெற வேண்டும்.
12. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.
13. ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்தவுடன், வேறு எந்த ATI க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.
14. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்து செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

15. 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் 5,000 ரூபா வசூலிக்கப்படும். (உள்ளக சுற்றறிக்கை (பரீட்சை) 04/2019 12.07.2019 திகதிய)

16. முழுநேர மற்றும் பகுதி நேர மாணவர்களுக்கு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

17. கல்வி ஆலோசனைச் சபை கூட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் ஆளும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பிற நுழைவுத் தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

18. க.பொ.த. (உ./த.) மற்றும் க.பொ.த. (சா./த.) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

19. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

20. இலங்கை உயர் தொழல்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE ) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2021 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.

21. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2022.01.31

பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
(SLIATE)

12-681

---

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இலங்கை விவசாய சேவை III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 ஆம் ஆண்டு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.12.03 ஆந் திகதியிட்ட 2257 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை விவசாய சேவை III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 ஆம் ஆண்டு" வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.01.18 என திருத்தம் செய்யப்படுகின்றது.

டி. எம். எல். பண்டாரநாயக்க,
செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு.

ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 29.

12-765

திருத்தம்

## தொழில் அமைச்சு

தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2256 ஆம் இலக்க 2021.11.26 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021" என்ற பரீட்சை அறிவித்தலில் 02. தகைமைகள் பந்தியில், பகுதி 2.3 பிற தகைமைகள் எனும் பகுதி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

02. **தகைமைகள்**.-

2.3 **வேறு தகைமைகள்**.-

(i) தற்போது இருக்கும் பதவியில் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பொதுச் சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதிருத்தல் வேண்டும்.

(iii) அறிவித்தலில் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் பதவிக்குத் தேவையான அவசியமான அனைத்துத் தகைமைகளையும் ஒவ்வொரு விதத்திலும் கொண்டிருத்தல் வேண்டும்.

02. சொல்லப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அனைத்தும் மாற்றமடையாது அவ்வாறே இருக்கும் என்பதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.01.18 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் இப்பதவிக்குரிய சகல தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. ஏற்கனவே இப்பரீட்சைக்காக விண்ணப்பத்தை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மீள விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டியதில்லை என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
தொழில் ஆணையாளர் அதிபதி,
தொழில் திணைக்களம்.

தொழில் செயலகம்,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு - 05,
2021, திசெம்பர் 29.

12-768

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.